தி/ள்.ஆர்.டி.பி. டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்

/எதிர்/

மத்திய கலால் மற்றும் சேவை வரி ஆணையர், கொல்கத்தா-IV ஆணையரகம்

(உரிமையியல் மேல்முறையீடு எண் 8534/2015)

2018 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13 ஆம் நாள்

[மாண்புமிகு நீதியரசர் ஆர். எஃப். நாரிமன் மற்றும் மாண்புமிகு நீதியரசர் நவின் சின்ஹா]

மத்திய கலால் சட்டம், 1944 - 1.3.2011 தேதியிட்ட விலக்கு அறிவிப்பு எண் 12/2011-CE மற்றும் 9.7.2004 தேதியிட்ட அறிவிப்பு எண் 30/2004 - மற்றொரு அலகின் வணிகப் பெயர் (brand name) - பொது விநியோகத் திட்டத்தின் (PDS) மூலம் விற்கப்படும் உணவு தானியங்களை கட்டி (packing) வைப்பதற்காக, பொதுத் துறை நிறுவனங்கள் (PSUs), பல்வேறு மாநில அரசுகள் மற்றும் அரசாங்க முகமைகள் (Governmental agencies) போன்றவற்றிக்கு சணல் பைகள் மேல்முறையீட்டாளர்களால் தயாரிக்கப்பட்டு, விற்கப்படுகின்றது - 9.7.2004 தேதியிட்ட அறிவிப்பு எண் 30/2004-ன் கீழ் அளிக்கப்பட்ட விலக்கு, இந்திய உணவு கழகம் (FCI), மாநில அரசுகள் போன்ற வாங்குபவர்களின் பெயர், வணிகக் குறி (logo) மற்றும் விவரங்களை ஒட்டுவது, சணல் பைகள் மீது

வணிகப் பெயரை (brand name) ஒட்டுவதற்கு சமம் என்ற காரணத்தினால், மறுக்கப்பட்டது - தீர்வு: இந்த வழக்கில், சணல் பைகளில் உண்மையில் ஒட்டப்பட்டிருப்பது என்னவென்றால், கேள்விக்குரிய கொள்முதல் நிறுவனமான இந்திய உணவு கழகம் (FCI), பஞ்சாப் மாநில அரசு மற்றும் அத்தகைய நிறுவனங்களின் பெயர்கள், பயிர் ஆண்டு (crop year), சம்பந்தப்பட்ட சணல் ஆலையின் பெயர், அதன் BIS சான்றளிப்பு எண் மற்றும் 'இந்த உணவு தானியங்கள் இந்தியாவில் தயாரிக்கப்பட்டவை' என்ற அறிக்கை ஆகியவையாகும் - இத்தகைய குறியீடுகள் சட்டத்தின் நிர்ப்பந்தத்தின் பேரில் செய்யப்பட்டவை, இவை பொது விநியோகத் திட்டத்தில் (PDS) ஈடுபட்டுள்ள அரசு நிறுவனங்களால் அடையாளம் காணவும், கண்காணிக்கவும் மற்றும் கட்டுப்படுத்தவும் பயன்படுத்தப்படுகின்றன - இத்தகைய குறியீடுகள் சணல் பைகளின் மதிப்பை எந்த வகையிலும் உயர்த்தாது, மேலும், சணல் பைகளின் மதிப்பை அவ்வாறு உயர்த்துவது மேல்முறையீட்டாளர்களின் நோக்கமும் இல்லை, கலால் வரி விதிக்கப்பட வேண்டுமானால், இந்த மதிப்பு அதிகரிப்பு அவசியமாகும் - சணல் பைகளில் இடப்பட்டுள்ள இந்தக் குறியீடுகள், வர்த்தகத்தின் போது, சணல் பைகளுக்கும், அந்தப் பெயரை அல்லது குறியீட்டைப் பயன்படுத்தும் சில நபர்களுக்கும் இடையே உள்ள தொடர்பைக் குறிக்கும் நோக்கத்திற்காக இடப்படவில்லை - இந்த நிலைமையில், இந்தக்

குறிப்பிட்ட வழக்குகளின் பொருண்மைகளில் "வணிகப் பெயர்" (brand name) எதுவும் சம்பந்தப்படவில்லை என்பது தெளிவாகிறது - மேல்முறையீட்டாளர் விலக்குச் சலுகையைப் பெறத் தகுதியுடையவர் ஆவார் - சணல் சிப்பங்கட்டும் பொருட்கள் (பொருட்களை பொதியிடுவதற்கு கட்டாயமாக பயன்படுத்துதல்) சட்டம், 1987 - அத்தியாவசிய பொருட்கள் சட்டம், 1955 - சணல் மற்றும் சணல் நெசவு கட்டுப்பாட்டு ஆணை, 2000 - அறிவிப்பு எண் 12/2011 – 01.03.2011 தேதியிட்ட CE – 09.07.2004 தேதியிட்ட அறிவிப்பு எண் 30/2004.

சுற்றறிக்கைகள்/அரசு ஆணைகள்/அறிவிப்பு: சுற்றறிக்கைகள் - அதன் கட்டுப்படுத்தும் தன்மை - தீர்வு: நிதி அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் மத்திய கலால் துறையை கட்டுப்படுத்துகின்றன.

மேல்முறையீடுகளை அனுமதித்து, இந்த நீதிமன்றம் தீர்ப்பளித்ததாவது-

1. சணல் துறை ஆணையர், மத்திய கலால் வரி ஆணையருக்கு எழுதிய 18.3.2011 தேதியிட்ட கடிதம் மற்றும் நிதி அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட 21.6.2011 தேதியிட்ட சுற்றறிக்கையை படிக்கும்போது, ஒரு நிறுவனத்தின் பெயர் பொருட்களின் மீது அச்சிடப்பட்டாலோ அல்லது எம்பிராய்டரி செய்யப்பட்டாலோ, அவை வணிக முத்திரையிடப்பட்ட தயாரிப்புகள் (branded products) என்று பொருள்படாது என்பது தெரிய வரும். கலால் வரியை

ஈர்ப்பதற்காக, பெயர் அல்லது வணிகக் குறியுடன் (logo) கூடுதலாக ஒரு வணிகப் பெயர் (brand name) கொடுக்கப்பட வேண்டும். மேலும், ஒரு உற்பத்தியாளரின் பெயரை மட்டும் ஒட்டுவது ஒரு வணிகப் பெயரை உருவாக்காது. [பத்தி 12] [1016-D-E]

2.1 வழங்கல் மற்றும் அகற்றல் இயக்குநரகத்தால் வெளியிடப்பட்ட ஒரு வழக்கமான கோரிக்கை உத்தரவு (requisition order), மேல்முறையீட்டாளர்களால் தயாரிக்கப்பட்ட சணல் பைகளில் வாங்குபவரின் சின்னம் மற்றும் வாங்குபவர் செலுத்த வேண்டிய கலால் வரி ஆகியவை அச்சிடப்பட வேண்டும் என்று கோருகிறது. [பத்தி 13] [1016-F]

2.2 சணல் துறை ஆணையரால் வழங்கப்பட்ட ஒரு பொதுவான விநியோக உத்தரவு, சட்டத்தின்படி, பொது விநியோகத் திட்டத்தில் (PDS) பயன்படுத்தப்பட வேண்டிய சணல் பைகளை அடையாளம் காணும் நோக்கங்களுக்காக, வாங்குபவரின் பெயரை உற்பத்தியாளரின் ஆலை பெயர் மற்றும் BIS சான்றிதழுடன் சேர்த்து அச்சிடப்பட வேண்டும் என்று கோரியது. [பத்தி 13] [1017-A]

3. இந்த வழக்கில், சணல் பைகளில் உண்மையில் ஒட்டப்பட்டிருப்பது என்னவென்றால், கேள்விக்குரிய கொள்முதல் நிறுவனமான இந்திய உணவு

கழகம் (FCI), பஞ்சாப் மாநில அரசு மற்றும் அத்தகைய நிறுவனங்களின் பெயர்கள், பயிர் ஆண்டு (crop year), சம்பந்தப்பட்ட சணல் ஆலையின் பெயர், அதன் BIS சான்றளிப்பு எண் மற்றும் 'இந்த உணவு தானியங்கள் இந்தியாவில் தயாரிக்கப்பட்டவை' என்ற அறிக்கை ஆகியவையாகும். சணல் கட்டுப்பாட்டு ஆணை மற்றும் அதன் கீழ் செய்யப்பட்ட கோரிக்கை உத்தரவுகளின் (requisition orders) அடிப்படையில், அபராதம் விதிக்கப்படும் அபாயத்தின் பேரில், சணல் பைகள் உற்பத்தியாளர்களால் இந்த குறியீடுகள் அனைத்தும் செய்யப்பட வேண்டும் என்பது தெளிவாகிறது. வெளிப்படையாக, இத்தகைய குறியீடுகள் சட்டத்தின் நிர்ப்பந்தத்தின் பேரில் செய்யப்பட்டவை, இவை பொது விநியோகத் திட்டத்தில் (PDS) ஈடுபட்டுள்ள அரசு நிறுவனங்களால் அடையாளம் காணவும், கண்காணிக்கவும் மற்றும் கட்டுப்படுத்தவும் பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய குறியீடுகள் சணல் பைகளின் மதிப்பை எந்த வகையிலும் உயர்த்தாது, மேலும், சணல் பைகளின் மதிப்பை அவ்வாறு உயர்த்துவது மேல்முறையீட்டாளர்களின் நோக்கமும் இல்லை, கலால் வரி விதிக்கப்பட வேண்டுமானால், இந்த மதிப்பு அதிகரிப்பு அவசியமாகும். "…… வர்த்தகத்தின் போது, பொருட்களுக்கும், அந்தப் பெயரை அல்லது குறியீட்டைப் பயன்படுத்தும் சில நபர்களுக்கும் இடையே உள்ள தொடர்பைக் குறிக்கும் நோக்கத்திற்காகவோ அல்லது அவ்வாறு குறிக்கும் விதமாகவோ ….." என்ற

சொற்றொடரிலிருந்து இது தொடர்கிறது. இந்த வழக்கில், சணல் பைகளில் இடப்பட்டுள்ள குறியீடுகள், வர்த்தகத்தின் போது, சணல் பைகளுக்கும், அந்தப் பெயரை அல்லது குறியீட்டைப் பயன்படுத்தும் சில நபர்களுக்கும் இடையே உள்ள தொடர்பைக் குறிக்கும் நோக்கத்திற்காக இல்லை. பொது விநியோகத் திட்டத்தில் (PDS) ஈடுபட்டுள்ள அரசு அதிகார அமைப்புகள் மேற்கூறிய சணல் பைகளை அடையாளம் கண்டு பிரித்து வைப்பதற்காக மட்டுமே சட்டத்தின் நிர்ப்பந்தத்தால் இந்த குறியீடுகள் செய்யப்படுகின்றன. இந்த நிலைமையில், இந்தக் குறிப்பிட்ட வழக்குகளின் பொருண்மைகளில் "வணிகப் பெயர்" (brand name) எதுவும் சம்பந்தப்படவில்லை என்பது தெளிவாகிறது. [பத்தி 18] [1020-F-H; 1021-A-B]

கோஹினூர் எலாஸ்டிக்ஸ் (பி) லிமிடெட் /எதிர்/ மத்திய கலால் வரி ஆணையர், (2005) 7 எஸ்.சி.சி. 528 – முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

மத்திய கலால் வரி ஆணையர் /எதிர்/ ஸ்டாங்கன் இம்யூனோ டயாக்னஸ்டிக்ஸ், [2015] 4 எஸ்.சி.ஆர். 528 : (2015) 11 எஸ்.சி.சி. 761; *மத்திய கலால் வரி ஆணையர் /எதிர்/ சங்கி திரேட்ஸ்,* (2015) 14 எஸ்.சி.சி. 701 - சார்வுறப்பட்டது.

4. நிதி அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் மத்திய கலால் துறையை கட்டுப்படுத்துகின்றன. [பத்தி 19] [1021- B]

***சி.ஐ.டி. /எதிர்/ டிரான்ஸ் ஏசியன் ஷிப்பிங் சர்வீசஸ் (பி) லிமிடெட்.*, [2016] 3 எஸ்.சி.ஆர். 337: (2016) 8 எஸ்.சி.சி. 604 - சார்வுறப்பட்டது.**

பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்

(2005) 7 எஸ்.சி.சி. 528	பத்தி 4	முக்கியத்துவம் அளிக்கப்பட்டது
[2015] 4 எஸ்.சி.ஆர். 528	பத்தி 17	சார்வுறப்பட்டது
(2015) 14 எஸ்.சி.சி. 701	பத்தி 17	சார்வுறப்பட்டது
[2016] 3 எஸ்.சி.ஆர். 337	பத்தி 19	சார்வுறப்பட்டது

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு: உரிமையியல் மேல்முறையீடு எண் 8534/2015.

மேல்முறையீடு எண் கலால் மேல்முறையீடு-75676/2014-ல் கொல்கத்தா, கிழக்கு மண்டல கிளை, சுங்கம், கலால் மற்றும் சேவை வரி மேல்முறையீட்டு

தீர்ப்பாயத்தின் 30.06.2015 தேதியிட்ட உத்தரவிலிருந்து இந்த மேல்முறையீடு எழுகிறது.

உடன்

உரிமையியல் மேல்முறையீடு எண்கள் 8703, 8725-8726, 8769, 8565, 9153, 8894-8895,8896-8897, 13331, 9242-9243, 9087, 9249, 9144, 8885-8886, 8890-8891, 13330, 8706, 8743, 9146-9147, 8759-8760/2015.

மேல்முறையீட்டாளருக்காக – எஸ்.கே.பகாரியா, நீராஜ் கிஷன் கவுன், மூத்த வழக்கறிஞர், அமித் அகர்வாலா, சவுரவ் அகர்வால், செளரப் பகாரியா, கபில் ருஸ்தகி, அஜித் சிங், சன்யாத் லோதா, விவேக் பி., ஆக்ரிதி தவார், சுஷால் திவாரி, டி.ஆர்.பி.சிவக்குமார்.

எதிர்மேல்முறையீட்டாளர்களுக்காக - கே. ராதாகிருஷ்ணன், மூத்த வழக்கறிஞர், ரூபேஷ் குமார், நிஷா பாக்சி, சுனிதா ராணி சிங், பூஜா ஷர்மா மற்றும் பி. கிருஷ்ண பிரசாத்.

இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பு **மாண்புமிகு நீதியரசர் ஆர்.எப். நாரிமன்** அவர்களால் வழங்கப்பட்டது.

1. பொது விநியோகத் திட்டத்தின் (PDS) மூலம் விற்கப்படும் உணவு தானியங்களை கட்டி (packing) வைப்பதற்காக, பொதுத் துறை நிறுவனங்கள் (PSUs), பல்வேறு மாநில அரசுகள் மற்றும் அரசாங்க முகமைகள் (Governmental agencies) போன்றவற்றிக்கு மேல்முறையீட்டாளர்களால் தயாரிக்கப்பட்டு, விற்பனை செய்யப்படுகின்ற சணல் பைகள் தொடர்பாக, சுங்கம், கலால் மற்றும் சேவை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் (CESTAT) இங்கு இனிமேல் குறிப்பிடப்படும் கலால் அறிவிப்புகளின் கீழ் உள்ள விலக்குரிமையை மறுத்து பிறப்பித்த 30.06.2015 தேதியிட்ட தீர்ப்புரையிலிருந்து இந்த மேல்முறையீடுகள் எழுகின்றன. இந்திய உணவு கழகம் (FCI), மாநில அரசுகள் போன்ற வாங்குபவர்களின் பெயர், வணிகக் குறி (logo) மற்றும் விவரங்களை ஒட்டுவது, சணல் பைகள் மீது "வணிகப் பெயரை" (brand name) ஒட்டுவதற்கு சமம் என்று கூறி, அந்த விலக்குரிமை (exemption) இரண்டு ஆண்டுகளுக்கு மறுக்கப்பட்டுள்ளது.

2. சணல் சிப்பங்கட்டும் பொருட்கள் (பொருட்களை பொதியிடுவதற்கு கட்டாயமாக பயன்படுத்துதல்) சட்டம், 1987 (இனிமேல் "சணல் சட்டம்" என்று குறிப்பிடப்படும்) பிரிவு 3 (1)-ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, சணல் தொழிலைப் பாதுகாக்கும் நோக்கில், இந்தியாவில் தயாரிக்கப்படும் சணல்

பைகளில், இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் மூல சணலிலிருந்து (raw jute) எவ்வளவு குறைந்தபட்ச சதவீத உணவு தானியங்களைப் பொதி செய்ய வேண்டும் என்று மத்திய அரசு அவ்வப்போது உத்தரவு பிறப்பித்துள்ளது.

3. அதே நேரத்தில், அத்தியாவசிய பொருட்கள் சட்டம், 1955, பிரிவு 3-ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி, மத்திய அரசு, 2000 ஆம் ஆண்டு சணல் மற்றும் சணல் நெசவு கட்டுப்பாட்டு ஆணையை இயற்றியுள்ளது. சணல் மற்றும் சணல் நெசவு கட்டுப்பாட்டு ஆணையால் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, சணல் துறை ஆணையர், குறிப்பிட்ட வகைகளில் மற்றும் குறிப்பிடப்பட்ட அளவு சணல் பைகளை உற்பத்தி செய்யவும், அதை கோரிக்கை உத்தரவுகளை (requisition orders) வெளியிடும் இயக்குநர் (வழங்கல் மற்றும் அகற்றல்) குறிப்பிடும் நபர்களுக்கு அவற்றை விற்பனை செய்யவும் சணல் ஆலைகளுக்கு அவ்வப்போது, குறிப்பிட்ட உத்தரவுகளை வழங்குகிறார், அதில், சணல் யாருக்கு வழங்கப்பட வேண்டுமோ அந்த நபர்களின் பெயர்கள், சணல் பைகளின் விலைகள் மற்றும் பிற விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இத்தகைய விலைகள் கலால் வரி நீங்கலானவை. மேற்கூறிய கோரிக்கை உத்தரவுகளைத் (requisition orders) தொடர்ந்து விநியோக ஆணைகள் வழங்கப்படுகின்றன, இதில் மற்றவற்றுடன் விலைகள்,

விநியோக காலம், விநியோக விதிமுறைகள் மற்றும் குறியீடுகள் பற்றிய கூடுதல் விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

4. மேல்முறையீட்டாளர்கள் சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் திரு.எஸ்.கே.பகாரியா மற்றும் ஸ்ரீ நீரஜ் கவுல் ஆகியோர், திருத்தப்பட்ட விலக்கு அறிவிக்கைகளின் அடிப்படையில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை (demands) எங்களிடம் குறிப்பிட்டு, 7.3.2014 தேதியிட்ட ஆணையரின் உத்தரவு மற்றும் சுங்கம், கலால் மற்றும் சேவை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பு உள்ளிட்ட ஆவணங்கள் அனைத்தையும் மிகவும் சிரமப்பட்டு எங்களுக்கு எடுத்துரைத்தனர். கற்றறிந்த வழக்கறிஞரின் கூற்றுப்படி, 1944 ஆம் ஆண்டு மத்திய கலால் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சணல் பைகளுக்கு வழங்கப்பட்ட விலக்குரிமை, உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் ஒரு வணிகப் பெயரைக் கொண்டிருந்தாலோ அல்லது ஒரு வணிகப் பெயரால் விற்கப்பட்டாலோ மட்டுமே, 1.3.2011 முதல் 1.3.2013 வரையிலான இரண்டு ஆண்டு காலத்திற்கு நீக்கப்பட்டது. கற்றறிந்த வழக்கறிஞரின் கூற்றுப்படி, "வணிகப் பெயர்" என்பதன் வரையறையைப் பார்க்க வேண்டுமானால், "வணிகப் பெயர்" (brand name) என்பது வர்த்தகத்தின் போது, பொருளுக்கும் அத்தகைய பெயர் அல்லது குறியீட்டைப் பயன்படுத்தும்

நபருக்கும் இடையில் உள்ள தொடர்பைக் குறிக்கும் நோக்கத்திற்காக ஒரு பொருளைப் பொறுத்து பயன்படுத்தப்படும் ஒரு பெயர் அல்லது குறியீடு என்பது தெளிவாகும். கற்றறிந்த வழக்கறிஞரின் கூற்றுப்படி, உணவு தானியங்களை வாங்குபவர் / கொள்முதல் செய்பவரின் பெயரைப் பயன்படுத்துவது என்பது, சணல் பைக்கும் அதை வாங்குபவருக்கும் இடையில் வர்த்தகத்தின் போது ஒரு தொடர்பைக் குறிக்கும் ஒரு வணிகப் பெயர் (brand name) அல்ல என்பது வெளிப்படையானது. காரணம் கேட்கும் அறிவிப்புகள், உற்பத்தியாளரின் பெயரையும் உற்பத்தியாளரின் சின்னத்தையும் பயன்படுத்துவது, வணிகப் பெயரைப் (brand name) பயன்படுத்துவதற்கு வழிவகுத்தது என்ற அடிப்படையில் தொடர்ந்தன; ஆனால், இது அவ்வாறு இருக்க முடியாது என்பதை உணர்ந்து, சுங்கம், கலால் மற்றும் சேவை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் தனது தீர்ப்பை உணவு தானியங்களை வாங்குபவரின்/பெறுபவரின் பெயரைப் பயன்படுத்தியதன் அடிப்படையில் அமைத்தது மற்றும் இது காரணம் கேட்கும் அறிவிப்புகளுக்கு அப்பாற்பட்டது, எனவே, சுங்கம், கலால் மற்றும் சேவை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் இந்த முடிவு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் அவர்கள் வாதிட்டனர். மேலும், பல தீர்ப்புகளை சார்வுற்று, தற்போதைய வழக்கில், வரையறுக்கப்பட்டுள்ளபடி "வணிகப் பெயர்" (brand name) எதுவும் இல்லை என்றும், எனவே, காரணம் கேட்கும் அறிவிப்பு,

ஆணையரின் உத்தரவு மற்றும் சுங்கம், கலால் மற்றும் சேவை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் உத்தரவு ஆகிய அனைத்தும் தவறானவை என்றும் அவர்கள் வாதிட்டனர். மேலும், அவர்களது வாதங்களை வலுப்படுத்த, 18.3.2011 தேதியிட்ட கடிதம் மற்றும் 21.6.2011 தேதியிட்ட நிதி அமைச்சகத்தின் சுற்றறிக்கை ஆகியவற்றின் மீது அவர்கள் சார்வுற்றனர். அவர்களைப் பொறுத்தவரை, ஆணையர் இந்த ஆவணங்களைக் குறிப்பிடவே இல்லை மற்றும் இந்த வழக்குகளின் ஆணிவேருக்குச் செல்லும் மேற்கூறிய ஆவணங்களை சுங்கம், கலால் மற்றும் சேவை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் வெறுமனே புறக்கணித்து விட்டது. இதுபோன்ற சுற்றறிக்கைகள் துறையை எவ்வாறு கட்டுப்படுத்துகின்றன என்பது குறித்த முடிவுகளையும் அவர்கள் மேற்கோள் காட்டினர். அவர்களைப் பொறுத்தவரை, கோஹினூர் எலாஸ்டிக்ஸ் (பி) லிமிடெட் /எதிர்/ மத்திய கலால் வரி ஆணையர், (2005) 7 எஸ்.சி.சி. 528 என்ற வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பை பெரிதும் சார்வுற்று, சுங்கம், கலால் மற்றும் சேவை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் முற்றிலும் தவறு செய்துள்ளது, ஏனெனில், அந்த தீர்ப்பு ஒரு குறிப்பிட்ட விலக்கு அறிவிப்பைக் கையாண்டது மற்றும் அதில், ஒரு வணிகப் பெயர் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்பட்டதால், அந்த வழக்கின் பொருண்மைகளின் அடிப்படையில், பயன்படுத்தப்பட்ட குறிப்பிட்ட குறியீடு வரையறுக்கப்பட்ட வணிகப் பெயரா என்பது குறித்து எந்த

வாதமும் எடுத்துரைக்கப்படவில்லை என்று தீர்ப்பளிக்கப்பட்டது. மேலும், அந்த வழக்கில் விலக்கு அறிவிப்பில், வணிகப் பெயரை சிறிய அளவிலான அலகுகள் பயன்படுத்த வேண்டும் என்றும், மூன்றாம் தரப்பினரால் பயன்படுத்த முடியாது என்றும், அந்த வழக்கின் பொருண்மைகளின் அடிப்படையில் இது கண்டறியப்பட்டது என்றும் தீர்ப்பு தெளிவாக வேறுபடுவதாக அவர்கள் கூறினர். ஆகையால், அவர்களைப் பொறுத்தவரை, இந்த வழக்குகளின் பொருண்மைகளின் அடிப்படையில் "வணிகப் பெயர்" பயன்படுத்தப்பட்டுள்ளது என்ற சுங்கம், கலால் மற்றும் சேவை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் முடிவு முற்றிலும் தவறானது.

5. வருவாய்த் துறை சார்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் திரு. ராதாகிருஷ்ணன், சணல் சட்டத்தின் பல்வேறு பிரிவுகளையும், மத்திய கலால் சட்டத்தின் 5A பிரிவையும் நம் முன் வைத்தார் . மத்திய கலால் சட்டத்தின் பிரிவு 5A மற்றும் அதன் கீழ் வெளியிடப்பட்ட விலக்கு அறிவிப்புகளை சணல் சட்டம் கட்டுப்படுத்த முடியாது என்பது அவரது வாதமாகும். வணிகப் பெயரின் வரையறையைப் படித்த அவர், இந்த வழக்குகளின் பொருண்மைகளில் தெளிவாக இருப்பது போல, ஒரு வணிகப் பெயர் உண்மையில் பயன்படுத்தப்பட்டு வந்த வரையில், அது பண ஆதாயத்திற்காக

பயன்படுத்தப்படுகிறது என்பதைக் காட்ட வேண்டிய அவசியமில்லை என்று கூறினார். வாங்குபவரின் விவரக்குறிப்பின்படி, சணல் பைகளில் அச்சிடப்பட்டவை என்னவென்றால், மற்றவற்றுக்கிடையில், உற்பத்தியாளரின் பெயர் மற்றும் வெவ்வேறு வண்ணங்களின் பட்டைகள் (strips of different colours) ஆகியவை ஆகும், இதன் மூலம் உற்பத்தியாளரின் பெயர் வெளிப்படுத்தப்பட்டது மட்டுமல்லாமல், வண்ண பட்டை ஒரு "குறியீடாக" இருக்கும் என்பதையும் குறிக்கிறது, எனவே இந்த வழக்குகளில் ஒரு "வணிகப் பெயர்" இருப்பதற்கு வழிவகுக்கிறது என்று அவர் வாதிட்டார், அவரைப் பொறுத்தவரை, வணிகப் பெயரின் வரையறையின் நேரடி விளக்கம், சுங்கம், கலால் மற்றும் சேவை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் சரியானது என்பதைக் காண்பிக்கும். மேலும், கற்றறிந்த வழக்கறிஞரின் கூற்றுப்படி, வணிகப் பெயரின் அதே வரையறையின் அடிப்படையில், இந்த வழக்குகளின் பொருண்மைகளில் ஒரு பெயரோ அல்லது குறியீடோ பயன்படுத்தப்பட்டுள்ளது, மேலும் இது உற்பத்தியாளரின் பெயரை மட்டுமல்லாமல், வாங்குபவரின் பெயர் அல்லது கொள்முதல் செய்பவரின் பெயரையும் காட்டுகிறது என்ற முடிவுக்கு வர, மேற்சொன்ன கோஹினூர் எலாஸ்டிக்ஸ் வழக்கின் தீர்ப்பை சுங்கம், கலால் மற்றும் சேவை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் சரியாக நம்பியுள்ளது.

6. இந்த வழக்குகளின் பொருண்மைகளை சற்று விரிவாகக் கையாள்வதற்கு முன், 9.7.2004 தேதியிட்ட அறிவிக்கை 30/2004-ன் கீழ் வழங்கப்பட்ட விலக்குகளை முதலில் குறிப்பிடுவது முக்கியம். மத்திய கலால் சட்டத்தின் பிரிவு 5A-ன் கீழ் வெளியிடப்பட்ட இந்த அறிவிக்கை, பொது நலன் கருதி அதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கலால் வரிக்குரிய பொருட்களுக்கு விலக்கு அளிக்கிறது. மேற்கூறிய அறிவிக்கையின் இனம் 16, 6307.10 க்குள் வரும் சரக்குகளைத் தவிர, மத்திய கலால் கட்டண பதிவு எண் 63-ன் கீழ் வரும் அனைத்து பொருட்களுக்கும் விலக்கு அளிக்கிறது. நாங்கள் கவனிக்கவேண்டியது மத்திய கலால் வரி 6305 ஆகும், குறிப்பாக, 63051030 மற்றும் 63051040, இதில் வரி விகிதம் 10% ஆகும். எனவே, 1.3.2011 வரை மத்திய கலால் கட்டண பதிவு எண் 63 ல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துப் பொருட்களுக்கும் ஆயத்தீர்வை செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. இருப்பினும், 1.3.2011 தேதியிட்ட அறிவிக்கை 12/2011-ன் மூலம், இனம் 16 மாற்றீடு செய்யப்பட்டது, இதில் விலக்கு அளிக்கப்பட்டவை, "ஒரு வணிகப் பெயரைக் கொண்ட அல்லது ஒரு வணிகப் பெயரின் கீழ் விற்கப்படும் பொருட்களைத் தவிர அனைத்து பொருட்களும்" ஆகும்.

7. வணிகப் பெயர், அத்தியாயம் 63-ன் நோக்கத்திற்காக, பின்வருமாறு வரையறுக்கப்படுகிறது:

"(iv). இந்த அத்தியாயத்தின் தயாரிப்புகளைப் பொறுத்தவரை, "வணிகப் பெயர்" என்பது பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத ஒரு வணிகப் பெயரைக் குறிக்கும், அதாவது, ஒரு சின்னம், மோனோகிராம், லேபிள், கையொப்பம் அல்லது கண்டுபிடிக்கப்பட்ட சொற்கள் அல்லது வேறு ஏதேனும் எழுத்துரு போன்ற ஒரு பெயர் அல்லது ஒரு குறியீடானது, ஒரு பொருள் தொடர்பாகப் பயன்படுத்தப்பட்டு, அந்தப் பொருளுக்கும் அத்தகைய பெயர் அல்லது குறியீட்டைப் பயன்படுத்தும் நபருக்கும் இடையே வணிகத்தின் போக்கில் உள்ள ஒரு தொடர்பைக் குறிக்கும் நோக்கத்திற்காகவோ அல்லது அவ்வாறு குறிக்கவோ பயன்படுவது ஆகும், இது அத்தகைய நபரின் அடையாளத்தைக் குறிப்பிட்டோ அல்லது குறிப்பிடாமலோ இருக்கலாம்."

8. மேற்கூறிய நிலைமை, 1.3.2013 வரை இரண்டு ஆண்டுகள் நீடித்தது, அப்போது, அறிவிக்கை எண் 11/2013, ஒரு வணிகப் பெயரைக் கொண்ட அல்லது அதன் கீழ் விற்கப்படும் பொருள்களுக்கு விலக்கு அளிக்காமல், முந்தைய

பதிவை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வந்தது, இதன் மூலம், 2004 மற்றும் 2011 க்கு இடையில் இருந்த நிலைக்கு மீண்டும் திரும்பியது, அதாவது, சணல் பைகள், வர்த்தகப் பெயருடன் இருந்தாலும் இல்லாவிட்டாலும், கலால் வரியிலிருந்து முழுமையாக விலக்கு அளிக்கப்பட்டன.

9. உரிமையியல் மேல்முறையீடு எண் 8534/2015-ன் பொருண்மைகள் இப்போது குறிப்பிடப்படும். 7.3.2011 அன்று, 1.3.2011 அன்று திருத்தப்பட்ட அறிவிக்கையின் படி, கண்காணிப்பாளர் (மத்திய கலால்) மேல்முறையீட்டாளருக்கு ஒரு அறிவிப்பை அனுப்பினார், அவர்கள் ஒரு வணிகப் பெயரைக் கொண்ட பொருட்களை விற்பனை செய்வதால், மேற்கூறிய பொருட்கள் மீது 10% வீதத்தில் கலால் வரி விதிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

10. அதன்பிறகு, சணல் துறை ஆணையரால் (மத்திய கலால் வரி) ஆணையருக்கு 18.3.2011 தேதியிட்ட ஒரு கடிதம் எழுதப்பட்ட து, அதில் கூறப்பட்டுள்ளதாவது:

> "2. இது தொடர்பாக, வாங்குபவர்களின் தேவைகள் மற்றும் சணல் துறை ஆணையரின் வழிகாட்டுதல்களின்படி, சணல் ஆலைகள் சில விவரங்களை சணல் பைகளில் அச்சிடுகின்றன என்பதைக்

குறிப்பிடலாம். சணல் பைகளில் அச்சிடப்பட்ட விவரங்கள் மற்றும் அவ்வாறு அச்சிடுவதற்கான காரணங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

வ.எண்.	அச்சிடப்பட்ட விவரங்கள்	குறிப்புகள்
1.	ஆலையின் பெயர்	04.07.2002 தேதியிட்ட அறிவிப்பு எண் S.O.698 (E)-ன்படி
2.	"இந்தியாவில் தயாரிக்கப்பட்டது"	"
3.	வாங்குபவரின் பெயர்	வாங்குபவரின் தேவைக்கேற்ப
4.	வணிகக் குறி (logo)	"
5.	உற்பத்தி செய்யப்பட்ட ஆண்டு	"
6	உரிமம் எண்ணுடன் கூடிய BIS குறியீடு	BIS விதிப்படி

3. சணல் ஆலைகள் வாங்குபவர்களின் தேவைக்கேற்ப பைகளில் விவரங்களை அச்சிட வேண்டும் மற்றும் 04.07.2002 தேதியிட்ட அறிவிப்பு எண் S.O.698 (E) சணல் ஆணையரால் வெளியிடப்பட்டது.

4. பைகளை அச்சிடுவதற்கான காரணங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

விவரங்கள் எண் 1& 2.

சணல் ஆணையரால் வெளியிடப்பட்ட 04.07.2002 தேதியிட்ட அறிவிப்பு எண் S.O.698 (E) (நகல் இணைக்கப்பட்டுள்ளது) இந்திய சணல் பொருட்கள் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட சணல் தயாரிப்புகளை வேறுபடுத்தி, JPM சட்டம், 1987-ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் நிபந்தனைகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதாகும். இந்த உத்தரவுகள், மற்றவற்றுக்கிடையே, "இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் மூல சணலிலிருந்து இந்தியாவில் தயாரிக்கப்பட்ட சணல் சிப்பங்கட்டும் பொருட்களில் (packaging material) சில சரக்குகள் அல்லது சரக்கு வகைகளின் மொத்த உற்பத்தியின் சதவீதம் எவ்வளவு நிரப்பப்பட வேண்டும்" என்பதை

வரையறுக்கின்றன. 27.08.2010 தேதியிட்ட சமீபத்திய உத்தரவு மற்றும் ஜே.பி.எம் சட்டம், 1987 ஆகியவற்றின் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

விவரங்கள் 3 முதல் 6 வரை.

இந்த விவரங்கள் பைகளில் அச்சிடப்படுகின்றன, இதனால் வாங்குபவர்கள் தங்களின் பொருள்களையும், உணவு தானியங்கள் அல்லது பிற பொருட்கள் பொதி (pack) செய்யப்பட்ட ஆண்டையும் அடையாளம் காண முடியும். ஒரு வாங்குபவர் BIS தரத்தின்படி சணல் தயாரிப்புகளை விரும்பினால், சணல் ஆலை BIS தரத்திற்கு இணங்க பைகளை உற்பத்தி செய்ய வேண்டும், மேலும், உரிம எண்ணுடன் BIS என்று குறிக்கப்பட்டால் மட்டுமே அது BIS தரமாக நிரூபிக்கப்படும்.

5. எனவே, சணல் ஆலைகளால் மேற்கூறிய விவரங்களுடன் அச்சிடப்பட்ட சணல் பைகள், விவரக்குறிப்புகளின் ஒரு பகுதியாகும், எனவே ஆலை நிறுவனத்தின் எந்தவொரு வணிகப் பெயரையும் கொண்ட சணல் பைகள், தீர்வை விதிக்கும் சூழலில் வணிகச் சின்னமிட்ட பைகளாக கருதப்படாது. பைகளில் இந்த விவரங்களை அச்சிடுவதன் மூலம், சணல் ஆலைகள் தங்கள் தயாரிப்புகளை

விளம்பரப்படுத்துவதில் எந்தவிதமான கூடுதல் அனுகூலத்தையும் பெறுவதில்லை.

6. மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, கொல்கத்தா-IV பிரிவின் கீழ் மத்திய கலால் கண்காணிப்பாளர் அலுவலகத்தால் பல்வேறு சணல் ஆலைகளுக்கு 10% கூடுதல் வரி (Adv. Duty) செலுத்துமாறு வழங்கப்பட்ட 08.03.2011 தேதியிட்ட அறிவிப்பை திரும்பப் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

11. இதனைத் தொடர்ந்து நிதி அமைச்சகத்தால் 21.6.2011 தேதியிட்ட சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. அதில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது:

"பொருள்: வணிகப் பெயர் *(branded)* கொண்ட ரெடிமேட் ஆடைகள் மற்றும் துணிகளால் செய்யப்பட்ட முடிக்கப்பட்ட பொருட்களின் *(made-up articles of textiles)* கலால் வரி விதிப்பது தொடர்பான பிரச்சினைகள் குறித்த தெளிவுபடுத்தல்.

வணிகப் பெயரைக் கொண்டுள்ள அல்லது அதன் கீழ் விற்கப்படும் ரெடிமேட் ஆடைகள் மற்றும் முடிக்கப்பட்ட ஆடைகள் மீது கலால் வரி விதிப்பது தொடர்பான சில பிரச்சினைகள் குறித்து விளக்கம் கோரி

வர்த்தகம் மற்றும் தொழில் துறையினரிடமிருந்து வாரியத்திற்கு கோரிக்கைகள் வந்துள்ளன. அந்த சிக்கல்கள் பின்வருமாறு:-

(i) பள்ளிச் சீருடைகள், தனியார் பாதுகாவலர்கள், நிறுவனங்கள், ஹோட்டல்கள், விமான நிறுவனங்கள் போன்றவற்றுக்கான சீருடைகள் மற்றும் ஹோட்டல், உணவகம் அல்லது விமான நிறுவனங்களின் பெயர் அல்லது சின்னம் கொண்ட லினன்கள், துண்டுகள் போன்ற முடிக்கப்பட்ட பொருட்கள் மீது கட்டாய கலால் வரி விதிப்பது பொருந்துமா என்பது குறித்த கேள்விகள்.

மற்றும்

(ii) உற்பத்தியாளரின் பெயரைக் கொண்ட போர்வைகள் போன்ற முடிக்கப்பட்ட பொருட்களை பாதுகாப்பு அமைச்சகம் அல்லது அதன் அமைப்புகளுக்கு வழங்கும்போது, அவற்றின் மீது கட்டாய கலால் வரி விதிப்பது பொருந்துமா என்பது குறித்த கேள்விகள்.

2. இந்த விவகாரம் பரிசீலிக்கப்பட்டுள்ளது. ஒரு பள்ளி, பாதுகாப்பு நிறுவனம், நிறுவனம், ஹோட்டல் அல்லது விமான நிறுவனம் போன்றவற்றின் பெயர் அல்லது சின்னத்தைக் கொண்ட சீருடைகள் அல்லது மெத்தை, போர்வைகள், துண்டுகள், கைத்தறி போன்ற

முடிக்கப்பட்ட பொருட்களுக்கு கலால் வரி விதிக்கப்படுவது குறித்து, அத்தகைய பொருட்களின் மீது பள்ளி, நிறுவனம் அல்லது கம்பெனியின் பெயர் அல்லது சின்னம் அச்சிடப்பட்டிருப்பதாலோ, எம்பிராய்டரி செய்யப்பட்டிருப்பதாலோ அல்லது பதியப்பட்டிருப்பதாலோ (etched), அவை வெறும் "வர்த்தக முத்திரையிடப்பட்ட" (branded) பொருட்களாகக் கருதப்படத் தேவையில்லை என்று தெளிவுபடுத்தப்படுகிறது. ஹோட்டல், உணவகம் அல்லது விமான நிறுவனங்களின் பெயரைக் கொண்ட துண்டுகள், விரிப்புகள் (linen) போன்ற முடிக்கப்பட்ட பொருட்களுக்கும் இது முற்றிலும் பொருந்தும். இந்த எல்லா சந்தர்ப்பங்களிலும், அத்தகைய பெயர் அல்லது சின்னம் மற்றும் அதன் விற்பனை நேரத்திற்கும் இடையே எந்த தொடர்பும் இல்லை, இது "வணிகப் பெயர்" என்ற வார்த்தையின் வரையறையில் இன்றியமையாத மூலப்பொருளாகும். அத்தகைய ஆடைகள் / முடிக்கப்பட்ட பொருட்கள் பள்ளி, பாதுகாப்பு நிறுவனம், ஹோட்டல்கள், விமான நிறுவனங்கள் மற்றும் நிறுவனத்தின் பெயர் அல்லது சின்னத்துடன் கூடுதலாக, ஒரு வணிகப் பெயரைக் கொண்டிருக்காவிட்டால், அத்தகைய பொருட்கள் கலால் வரியை

ஈர்க்காது. சில சந்தர்ப்பங்களில், அத்தகைய நிறுவனங்களின் பெயர் அல்லது சின்னத்தைத் தவிர, தையல்காரர் அல்லது உற்பத்தியாளரின் பெய ரும் அத்தகைய ஆடைகளில் ஒட்டப்படுவதும் தெரியவருகிறது. இருப்பினும், தையல்காரர் அல்லது உற்பத்தியாளரின் பெயரை மட்டும் ஒட்டுவது ஒரு வணிகப் பெயராக இருக்காது. மற்றொரு தொடர்புடைய பிரச்சினை என்னவென்றால், உற்பத்தியாளரின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும் அல்லது தயாரிப்பில் குறிக்கப்பட வேண்டும் என்று விதிக்கும் டெண்டர்களுக்கு எதிராக பாதுகாப்பு ஸ்தாபனம், ஆயுதப்படைகள், காவல் படைகள் போன்றவற்றுக்கு வழங்கப்படும் போர்வைகளுக்கு கட்டாய கலால் வரி விதிப்பது பொருந்துமா என்பதுதான். மேலே சுட்டிக்காட்டியபடி, அத்தகைய பொருட்களில் உற்பத்தியாளரின் பெயரை ஒட்டுவது தானாகவே அவற்றை 'வர்த்தக முத்திரையிடப்பட்ட பொருட்களின்' (branded goods) வரம்பிற்குள் கொண்டு வராது."

12. மேற்கூறிய கடிதத்தையும் சுற்றறிக்கையையும் வாசிக்கும் போது, ஒரு நிறுவனத்தின் பெயர் பொருட்களின் மீது அச்சிடப்பட்டாலோ அல்லது எம்பிராய்டரி செய்யப்பட்டாலோ, அவை வணிக முத்திரையிடப்பட்ட தயாரிப்புகள்

(branded products) என்று பொருள்படாது என்பது தெரிய வரும். கலால் வரியை ஈர்ப்பதற்காக, பெயர் அல்லது வணிகக் குறியுடள் (logo) கூடுதலாக ஒரு வணிகப் பெயர் (brand name) கொடுக்கப்பட வேண்டும். மேலும், ஒரு உற்பத்தியாளரின் பெயரை மட்டும் ஒட்டுவது ஒரு வணிகப் பெயரை உருவாக்காது. மேற்கண்ட இரண்டு ஆவணங்களையும் வைத்துப் பார்க்கும்போது, கண்காணிப்பாளர் (மத்திய கலால்) 7.3.2011 தேதியிட்ட அறிவிக்கையை தொடரவில்லை.

13. வழங்கல் மற்றும் அகற்றல் இயக்குநரகத்தால் வெளியிடப்பட்ட ஒரு வழக்கமான கோரிக்கை உத்தரவு (requisition order), மேல்முறையீட்டாளர்களால் தயாரிக்கப்பட்ட சணல் பைகளில் வாங்குபவரின் சின்னம் மற்றும் வாங்குபவர் செலுத்த வேண்டிய கலால் வரி ஆகியவை அச்சிடப்பட வேண்டும் என்று கோருகிறது. மேலும், மேற்கூறிய கோரிக்கை உத்தரவுக்கு தேவைப்பட்டது பின்வருமாறு:

> "வணிகப் பெயரிடல் (branding): ஒவ்வொரு பையும் சட்டக்கூறு 8-ன் படி உள்ள சின்னங்களுட னும் மற்றும் பின்வருவனவற்றுடனும், அடர் கடற்படை நீல நிறத்தில் (dark navy blue colour) (மிகவும் அடர்த்தியான நிறத்தில்) திரை அச்சு செய்யப்பட வேண்டும்:

அ) கொள்முதல் முகமை யின் அடையாளம் (கொள்முதல் முகமையால் அறிவுறுத்தப்பட்டபடி அதன் சின்னம் மற்றும் பெயர் அல்லது சுருக்கப் பெயர் அல்லது இரண்டும் இதில் இருக்கும்).

b) ராபி 2013-14

இ) பெரிய எழுத்துக்களில் ஆலையின் சுருக்கப் பெயர் மற்றும் CM/L எண்.

ஈ) "இந்தியாவில் தயாரிக்கப்பட்டது"

சணல் துறை ஆணையரால் வழங்கப்பட்ட ஒரு பொதுவான விநியோக உத்தரவு, சட்டத்தின்படி, பொது விநியோகத் திட்டத்தில் (PDS) பயன்படுத்தப்பட வேண்டிய சணல் பைகளை அடையாளம் காணும் நோக்கங்களுக்காக, வாங்குபவரின் பெயரை உற்பத்தியாளரின் ஆலை பெயர் மற்றும் BIS சான்றிதழுடன் சேர்த்து அச்சிடப்பட வேண்டும் என்று கோரியது.

14. 1.3.2013 அன்று விலக்கு அறிவிக்கை வெளியிடப்பட்டு, அதன்படி அனைத்து சணல் பைகளுக்கும் வணிக முத்திரையிடப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும் விலக்கு அளிக்கப்பட்டது, அதன்பிறகு, 1.3.2011 முதல் 31.7.2013 வரையிலான காலத்திற்கு ரூ.30,49,72,784/- ஆயத்தீர்வை கோரி 17.12.2013 அன்று காரணம் கேட்டும் அறிவிப்பு வழங்கப்பட்டது.

15. கற்றறிந்த ஆணையர், 7.3.2014 தேதியிட்ட தனது உத்தரவின் மூலம், 1.3.2013-க்குப் பிந்தைய காலத்திற்கு காரணம் கேட்டும் அறிவிப்பு அனுப்பப்பட்டதை பின்வருமாறு உறுதிப்படுத்தினார்:

> "4.7 மேற்கூறிய வரி விதிப்புக்குரியவரால் முன்வைக்கப்பட்ட அத்தகைய வாதங்களைக் கவனத்தில் கொண்டு, அத்தியாயம் 63, அத்தியாயம் குறிப்பு 5-ன் கீழ் வரும் "வணிகப் பெயர்" என்ற வரையறையின் அடிப்படை அம்சங்களில் மேற்கூறிய வரி விதிப்புக்குரியவர் தவறிழைத்துள்ளார் என்பதை நான் காண்கிறேன். பொருட்களை வாங்கி விற்கும் போது அது ஒரு சந்தையாக மாறும். இந்த வழக்கில், மேற்கூறிய வரி விதிப்புக்குரியவர் சணல் பைகளை தங்கள் வாடிக்கையாளர்களுக்கு விற்றார், மேலும் அத்தகைய பொருட்கள் வணிக முத்திரையிடப்பட்ட பொருட்கள் என்று கூறப்படுவதால், அந்த வணிக முத்திரையிடப்பட்ட பொருட்கள் சந்தையில் விற்கப்படவில்லை என்று வாதிட முடியாது. மேலும், அத்தியாயம் 63, அத்தியாயம் குறிப்பு 5-ன் கீழ் வரும் "வணிகப் பெயர்" என்ற வரையறையின்படி, "வணிகப் பெயர்" என்பது அவர்களால் தவறாக வாதிடப்படுவது போல் ஒரு பெயராக இருக்க வேண்டிய

அவசியமில்லை, ஆனால் எந்தவொரு எழுத்தும், குறியீடும், கண்டுபிடிக்கப்பட்ட சொற்களும் மேற்கூறிய வரையறையின் கீழ் "வணிகப் பெயர்" ஆக இருக்கலாம். இங்கே, சணல் பைகளில் உள்ள அச்சிடல்கள் / எழுத்துக்கள் அத்தியாயம் 63, அத்தியாயம் குறிப்பு 5-ன் கீழ் "வணிகப் பெயர்" என்பதற்கான வரையறையை பூர்த்தி செய்கின்றன, இது எதிர்ப்புக்குள்ளான காரணம் கேட்கும் அறிவிப்பில் சரியாகக் கூறப்பட்டுள்ளது.

4.8 சணல் துறை ஆணையர் வெளியிட்ட 04.07.2002 தேதியிட்ட அறிவிக்கை எண் 'பூஜ்யம்' (nil) மற்றும் மற்றும் 18.03.11 தேதியிட்ட தனது கடிதத்தின் மூலம் மேற்கூறிய அதிகாரியால் வழங்கப்பட்ட கூடுதல் விளக்கத்தை நான் ஆய்வு செய்தபோது, சணல் ஆணையர் கருத்து தெரிவித்தபடி, மேற்கூறிய ஜவுளி அமைச்சகத்தின் அறிவிக்கையின் தேவைக்கேற்ப சணல் பைகளில் உள்ள சில அச்சிடல்கள் / எழுத்துக்கள் உள்ளன, மேலும் அத்தகைய சரக்குகள் அவர் கருத்தின் படி, வணிக முத்திரையிடப்பட்ட பொருட்களாக கருதப்பட முடியாது என்பதை நான் காண்கிறேன். இந்த சூழலில், இந்த விஷயத்தில் சணல் துறை ஆணையரின் கருத்துக்களின்

நம்பத்தகுந்த மதிப்பை ஒரேயடியாக நிராகரிக்கவோ அல்லது ஒதுக்கித் தள்ளவோ முடியாது என்று நான் காண்கிறேன், ஆனால் ஒரு நீதிமுறைச் சார்புடைய வருவாய் அதிகாரி என்ற முறையில், சட்ட விதிகளின் சொற்களில் எதையும் இறக்குமதி செய்ய முடியாது என்ற சட்டத்தின் நிலையான கோட்பாடுகளின்படி நான் செல்ல வேண்டும், மற்றும் அந்த விஷயத்தில், அத்தியாயக் குறிப்புகளை அதன் கறாரான சொற்களில் படிக்க வேண்டும். "வணிகப் பெயர்" என்ற வரையறையின் கூறுகள் ஆட்சேபனைக்குரிய சணல் பைகளில் இருப்பதால், வணிகப் பெயர் கொண்டுள்ள அத்தகைய சரக்குகள் வணிக முத்திரையிடப்பட்ட பொருட்களாக கருதப்பட வேண்டும் என்று நான் கருதுகிறேன், எனவே, மீதமுள்ள காலத்திற்கு அதாவது மார்ச் 2011 முதல் பிப்ரவரி 2013 வரையிலான காலத்திற்கான மத்திய கலால் வரியை விதிக்கும் நோக்கமும் நிலையானது என்றும் நான் முடிவெடுக்க முனைகிறேன்.

16. சுங்கம், கலால் மற்றும் சேவை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம், எதிர்ப்புக்குள்ளான உத்தரவின் மூலம், விதிக்கப்பட்ட அபராதத்தை ரத்து செய்து, இந்த வழக்குகளின் பொருண்மைகளில் நீண்ட கால வரம்பைப் பெற முடியாது

என்று கூறியது. இருப்பினும், மேற்சொன்ன **கோஹினூர் எலாஸ்டிக்ஸ்** வழக்கில் இந்த நீதிமன்றம் அளித்த தீர்ப்பை வலுவாக நம்பி , சணல் பைகளுக்கு ஒரு வணிகப் பெயர் இருப்பதால், 1.3.2011 அன்று திருத்தப்பட்ட அறிவிக்கையில் உள்ள விலக்கு மேல்முறையீட்டாளர்களுக்கு பொருந்தாது என்ற முடிவுக்கு வந்தது. நிதி அமைச்சகத்தின் 21.6.2011 தேதியிட்ட சுற்றறிக்கையைப் பற்றிக் கூறும்போது, சுங்கம், கலால் மற்றும் சேவை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் அதனை கீழ்கண்டவாறு கூறி ஒதுக்கித் தள்ளியது:

> "மேலும், ஆடைகள் மீது கலால் வரி விதிக்கும் சூழலில் மேல்முறையீட்டாளரால் குறிப்பிடப்பட்ட 21.06.2011 தேதியிட்ட சுற்றறிக்கை எண் 947/8/2011-CX-ஐ நாங்கள் காண்கிறோம் மற்றும் மத்திய கலால் வரி ஆணையர், போல்பூர் /எதிர்/ ரத்தன் மெல்ட்டிங் அண்ட் வயர் இண்டஸ்ட்ரீஸ், 2008 (231) இ.எல்.டி. 22 (எஸ்.சி.) என்ற வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் கூறியுள்ளபடி, நீதிமன்றங்களால் முன்வைக்கப்பட்ட விளக்கங்களை கட்டுப்படுத்தாது என்பதை நாங்கள் காண்கிறோம்."

17. மேலே குறிப்பிடப்பட்டுள்ள "வணிகப் பெயர்" என்பதன் வரையறையே இந்த நீதிமன்றத்தின் பல தீர்ப்புகளில் பரிசீலனைக்கு வந்துள்ளது. **மத்திய கலால்**

வரி ஆணையர் /எதிர்/ ஸ்டாங்கன் இம்யூனோ டயாக்னஸ்டிக்ஸ், (2015) 11 எஸ்.சி.சி. 761 என்ற வழக்கின் தீர்ப்பில் பத்தி 3-ல், இந்த நீதிமன்றம் வணிகப் பெயரின் வரையறையை அமைத்தது, இது தற்போதைய வழக்கில் உள்ள வரையறையைப் போன்றது. இந்த நீதிமன்றம் மேலும் கூறியதாவது:

> "12. மேற்கூறிய வரையறையில் உள்ள மையக் கருத்து என்னவென்றால், பெயர் அல்லது குறியீட்டைப் பயன்படுத்தும் சில நபருடன் கூறப்பட்ட பொருட்களின் தொடர்பைக் காட்டும் நோக்கத்துடன் குறியீடு பயன்படுத்தப்படுகிறது என்பதேயாகும். எனவே, "வணிகப் பெயர்" அல்லது "வர்த்தகப் பெயர்" என்று தகுதி பெறுவதற்கு, அத்தகைய குறியீடு, சின்னம், வடிவமைப்பு அல்லது பெயர் போன்றவை, உற்பத்தியாளருடன் கூறப்பட்ட குறியீடு போன்றவற்றை இணைக்கக்கூடிய இயல்பின் நன்மதிப்பை பெற்றுள்ளன என்பதை நிறுவ வேண்டும். *தராய் ஃபுட் லிமிடெட் /எதிர்/ மத்திய கலால் வரி ஆணையர் [தராய் ஃபுட் லிமிடெட் /எதிர்/ மத்திய கலால் வரி ஆணையர்,* (2007) 12 எஸ்.சி.சி. 721] என்ற வழக்கில் இந்த நீதிமன்றத்தின் தொடர்ச்சியான தீர்ப்புகளால் இந்த கருத்தில் நாங்கள் ஆதரிக்கப்படுகிறோம்: "வணிகப் பெயர்" என்ற சொற்றொடர்

பின்வரும் விதிமுறைகளில் விளக்கப்பட்டது: (எஸ்.சி.சி. பக்கம் 723, பத்திகள் 7 மற்றும் 9)

"7. வணிகப் பெயர் என்பது ஒரு குறியீடு, சின்னம், வடிவமைப்பு அல்லது பெயரைக் குறிக்கிறது, இது ஒரு குறிப்பிட்ட தயாரிப்பாளருக்கு தனித்துவமானது, இது ஒரு குறிப்பிட்ட தயாரிப்பில் பயன்படுத்தப்படும்போது தயாரிப்புக்கும் உற்பத்தியாளருக்கும் இடையே ஒரு தொடர்பை ஏற்படுத்துகிறது.

***

9. மேலும், 'வணிகப் பெயர்' என்ற சொற்களின் வரையறை, அது ஒரு பெயர் அல்லது ஒரு குறியீடு அல்லது மோனோகிராம் போன்றவையாக இருக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது, இது ஒரு குறிப்பிட்ட தயாரிப்பு தொடர்பாக பயன்படுத்தப்படுகிறது மற்றும் தயாரிப்புக்கும் நபருக்கும் இடையிலான தொடர்பை நிறுவுகிறது. எனவே, இந்தப் பெயர் அல்லது குறியீடு போன்றவை ஒரு நபரின் அடையாளமாக இருக்க முடியாது. இது தயாரிப்புடன் இணைக்க மற்றும் அந்த இணைப்பை நிறுவிய வேறு ஏதாவது இருக்க வேண்டும்."

xxx xxx xxx

16. *மத்திய கலால் வரி ஆணையர் /எதிர்/ பல்லா எண்டர்பிரைசஸ் [மத்திய கலால் வரி ஆணையர் /எதிர்/ பல்லா எண்டர்பிரைசஸ்,* (2005) 8 எஸ்.சி.சி. 308] : (எஸ்.சி.சி. பக்கம் 311, பத்தி 6) என்ற வழக்கிலிருந்து பின்வரும் அவதானிப்பை மீண்டும் உருவாக்க விரும்புகிறோம் -

> "6. நாட்டின் தொலைதூரப் பகுதியில் உள்ள வேறு சில வர்த்தகர்கள் கூட முன்பே வர்த்தக முத்திரையைப் பயன்படுத்தினர் என்ற ஒரே காரணத்திற்காக, தங்களுக்கு விலக்கு மறுக்கப்படலாம் என்ற வரி விதிப்புக்குரியவர்களின் அச்சம் ஆதாரமற்றது. வரி விலக்கு கோரப்படும் சரக்குகள், வரி விதிப்புக்குரியவரின் சரக்குகள் மற்றும் அத்தகைய பிற நபருடன் ஒரு தொடர்பைக் குறிக்கும் நோக்கத்துடன் அதே / ஒத்த வணிகப் பெயரைப் பயன்படுத்தினால் அல்லது அத்தகைய தொடர்பைக் குறிக்கும் வகையில் பெயரைப் பயன்படுத்தினால் மட்டுமே வரி விதிப்புக்குரியவர் தடை செய்யப்படுவார் என்று அறிவிப்பு தெளிவாகக் குறிப்பிடுகிறது. எனவே, வரி விதிப்புக்குரியவர் அத்தகைய நோக்கம் எதுவும் இல்லை என்பதையோ அல்லது

வணிகப் பெயரைப் பயன்படுத்துவது முற்றிலும் தற்செயலானது என்பதையோ மற்றும் மதிப்பெண்களின் நியாயமான மதிப்பீட்டில் அத்தகைய தொடர்பைக் குறிக்க முடியவில்லை என்று மதிப்பீட்டு அதிகாரிகளை திருப்திப்படுத்த முடிந்தால், விலக்கின் பலனைப் பெற அவருக்கு உரிமை உண்டு. வணிகப் பெயர் வரி விதிப்புக்குரியருக்கு சொந்தமானதாக இருந்தால், வரி விதிப்புக்குரியவருக்கு விலக்கின் பலனைப் பெற உரிமை உண்டு, இருப்பினும் வேறு யாராவது அத்தகைய பெயருக்கு சமமாக உரிமை பெற்றிருக்கலாம்."

17. இந்த அவதானிப்புகள் இரண்டு குறிப்பிடத்தக்க அம்சங்களை வெளிப்படுத்துகின்றன, அவையாவன:

(1) இந்த அறிவிப்பின் படி, வரி விலக்கு கோரப்படும் சரக்குகள், வரி விதிப்புக்குரியவரின் சரக்குகள் மற்றும் அத்தகைய பிற நபருடன் ஒரு தொடர்பைக் குறிக்கும் நோக்கத்துடன் அதே / ஒத்த வணிகப் பெயரைப் பயன்படுத்தினால் அல்லது அத்தகைய தொடர்பைக் குறிக்கும் வகையில் பெயரைப் பயன்படுத்தினால் மட்டுமே வரி விதிப்புக்குரியவர் தடை செய்யப்படுவார். அத்தகைய நோக்கம் எதுவும்

இல்லை என்பதையோ அல்லது வணிகப் பெயரைப் பயன்படுத்துவது முற்றிலும் தற்செயலானது என்பதையோ மற்றும் மதிப்பெண்களின் நியாயமான மதிப்பீட்டில் அத்தகைய தொடர்பைக் குறிக்க முடியவில்லை என்றால், விலக்கின் பலனைப் பெற அவருக்கு உரிமை உண்டு.

(2) வணிகப் பெயர் வரி விதிப்புக்குரியருக்கு சொந்தமானதாக இருந்தால், வரி விதிப்புக்குரியவருக்கு விலக்கின் பலனைப் பெற உரிமை உண்டு, இருப்பினும் வேறு யாராவது அத்தகைய பெயருக்கு சமமாக உரிமை பெற்றிருக்கலாம்."

(பக்கங்கள் 766, 767-768)

இதேபோன்ற விளைவைக் கொண்டதே இந்த நீதிமன்றத்தின் **மத்திய கலால் வரி ஆணையர் /எதிர்/ சங்கி திரேட்ஸ்**, (2015) 14 எஸ்.சி.சி. 701 பக்கம் 702, வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பாகும், அதில் கீழ்கண்டவாறு தீர்ப்ளிக்கப்பட்டது:

"3. சுங்கம், கலால் மற்றும் சேவை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் உத்தரவை எதிர்த்து, தற்போதைய மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டது. மேற்கூறிய பொருண்மைகளின் விவரிப்பிலிருந்து, எதிர்மேல்முறையீட்டாளர் பயன்படுத்திய மோனோகிராம் அதன்

சொந்த நிறுவன குறியீடே (house-mark) தவிர வேறில்லை என்றும், குழுமத்தை அடையாளம் காணப் பயன்படுத்தப்படுகிறது, தயாரிப்பை அடையாளம் காண்பதற்கான வணிகப் பெயர் அல்ல என்றும் கருதப்படுகிறது. வலியுறுத்தப்பட்ட விஷயம் என்னவென்றால், மோனோகிராம் எந்த மூன்றாம் தரப்பினருக்கும் சொந்தமானது அல்ல, ஆனால் அது சங்கி குழுமத்திற்கு சொந்தமானது, எனவே இது நிறுவனத்திற்குரிய மோனோகிராமாகும் (in-house monogram). இந்த பொருண்மைகளின் அடிப்படையில், இந்த வழக்கு, 19.03.2015 அன்று முடிவு செய்யப்பட்ட *மத்திய கலால் வரி ஆணையர் /எதிர்/ ஸ்டாங்கன் இம்யூனோ டயாக்னஸ்டிக்ஸ்,* [(2015) 11 எஸ்.சி.சி. 761: (2015) 318 இ.எல்.டி. 585] வழக்கின் தீர்ப்பில் முழுவதுமாக உள்ளடங்குகிறது என்ற கருத்தை நாங்கள் கொண்டுள்ளோம்.

18. இந்த வழக்குகளின் பொருண்மைகளின் அடிப்படையில், சணல் பைகளில் உண்மையில் ஒட்டப்பட்டிருப்பது என்னவென்றால், கேள்விக்குரிய கொள்முதல் நிறுவனமான இந்திய உணவு கழகம் (FCI), பஞ்சாப் மாநில அரசு மற்றும் அத்தகைய நிறுவனங்களின் பெயர்கள், பயிர் ஆண்டு (crop year), சம்பந்தப்பட்ட சணல் ஆலையின் பெயர், அதன் BIS சான்றளிப்பு எண் மற்றும்

’இந்த உணவு தானியங்கள் இந்தியாவில் தயாரிக்கப்பட்டவை’ என்ற அறிக்கை ஆகியவையாகும் என்பது தெளிவாகிறது. சணல் கட்டுப்பாட்டு ஆணை மற்றும் அதன் கீழ் செய்யப்பட்ட கோரிக்கை உத்தரவுகளின் (requisition orders) அடிப்படையில், அபராதம் விதிக்கப்படும் அபாயத்தின் பேரில், சணல் பைகள் உற்பத்தியாளர்களால் மேற்சொன்ன குறியீடுகள் அனைத்தும் செய்யப்பட வேண்டும் என்பது தெளிவாகிறது. வெளிப்படையாக, இத்தகைய குறியீடுகள் சட்டத்தின் நிர்ப்பந்தத்தின் பேரில் செய்யப்பட்டவை, இவை பொது விநியோகத் திட்டத்தில் (PDS) ஈடுபட்டுள்ள அரசு நிறுவனங்களால் அடையாளம் காணவும், கண்காணிக்கவும் மற்றும் கட்டுப்படுத்தவும் பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய குறியீடுகள் சணல் பைகளின் மதிப்பை எந்த வகையிலும் உயர்த்தாது, மேலும், சணல் பைகளின் மதிப்பை அவ்வாறு உயர்த்துவது மேல்முறையீட்டாளர்களின் நோக்கமும் இல்லை, கலால் வரி விதிக்கப்பட வேண்டுமானால், இந்த மதிப்பு அதிகரிப்பு அவசியமாகும். "…… வர்த்தகத்தின் போது, பொருட்களுக்கும், அந்தப் பெயரை அல்லது குறியீட்டைப் பயன்படுத்தும் சில நபர்களுக்கும் இடையே உள்ள தொடர்பைக் குறிக்கும் நோக்கத்திற்காகவோ அல்லது அவ்வாறு குறிக்கும் விதமாகவோ ….." என்ற சொற்றொடரிலிருந்து இது தொடர்கிறது. இந்த வழக்கில், சணல் பைகளில் இடப்பட்டுள்ள குறியீடுகள், வர்த்தகத்தின் போது, சணல் பைகளுக்கும், அந்தப்

பெயரை அல்லது குறியீட்டைப் பயன்படுத்தும் சில நபர்களுக்கும் இடையே உள்ள தொடர்பைக் குறிக்கும் நோக்கத்திற்காக இல்லை. பொது விநியோகத் திட்டத்தில் (PDS) ஈடுபட்டுள்ள அரசு அதிகார அமைப்புகள் மேற்கூறிய சணல் பைகளை அடையாளம் கண்டு பிரித்து வைப்பதற்காக மட்டுமே சட்டத்தின் நிர்ப்பந்தத்தால் இந்த குறியீடுகள் செய்யப்படுகின்றன. இந்த நிலைமையில், இந்தக் குறிப்பிட்ட வழக்குகளின் பொருண்மைகளில் "வணிகப் பெயர்" (brand name) எதுவும் சம்பந்தப்படவில்லை என்பது தெளிவாகிறது.

19. அதேபோல், நிதி அமைச்சகத்தால் வெளியிடப்படும் சுற்றறிக்கைகள் மத்திய கலால் துறைக்கு கட்டுப்பட்டவை என்பது தெளிவாகிறது, மற்றும் அத்தகைய சுற்றறிக்கைகளுக்கு முரணான எந்தவொரு சட்டத்தையும் இந்த நீதிமன்றம் வழங்கவில்லை. இது, **சி.ஐ.டி. /எதிர்/ டிரான்ஸ் ஏசியன் ஷிப்பிங் சர்வீசஸ் (பி) லிமிடெட்**, (2016) 8 எஸ்.சி.சி. 604 என்ற வழக்கின் தீர்ப்பில் பத்தி 30-ல் கூறப்பட்டுள்ளபடி நன்கு நிறுவப்பட்ட கருத்தாகும்.

20. எவ்வாறாயினும், மேற்சொன்ன கோஹினூர் எலாஸ்டிக்ஸ் வழக்கில் இந்த நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் மீது அதிக நம்பிக்கை வைக்கப்பட்டுள்ளதால், மேற்கூறிய தீர்ப்பை நாங்கள் கையாள வேண்டியது அவசியமாகிறது. அந்த வழக்கின் பொருண்மைகளின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட விலக்கு

அறிவிக்கை, 28.2.1993 தேதியிட்ட அறிவிக்கையாகும். நீதிமன்றம் சம்பந்தப்பட்ட அறிவிப்பின் தொடர்புடைய பகுதி, பத்தி 4 இல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

"இந்த அறிவிப்பில் உள்ள விலக்கு மற்றொரு நபரின் வணிகப் பெயர் அல்லது வர்த்தக பெயரைக் (பதிவு செய்யப்பட்டதோ இல்லையோ) கொண்ட குறிப்பிட்ட பொருட்களுக்கு பொருந்தாது:

வரம்புரையாக, இந்தப் பத்தியில் அடங்கியுள்ள எதுவும், ஏதேனும் இயந்திரங்கள் அல்லது உபகரணம் அல்லது சாதனங்களின் உட்கூறுகளாக இருக்கும் மற்றும் மேற்கூறிய இயந்திரங்கள் அல்லது உபகரணங்கள் அல்லது சாதனங்களின் உற்பத்தியில் அசல் உபகரணமாகப் பயன்படுத்துவதற்காக ஒரு தொழிற்சாலையிலிருந்து அனுப்பப்படும் குறிப்பிட்ட சரக்குகளுக்குப் பொருந்தாது மற்றும் மேற்கூறிய விதிகளின் பத்தாம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறை பின்பற்றப்படுகிறது:

விளக்கம் IX.- 'வணிகப் பெயர்' அல்லது 'வர்த்தகப் பெயர்' என்பது பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத ஒரு வணிகப் பெயர் அல்லது வர்த்தகப் பெயரைக் குறிக்கும், அதாவது, [ஒரு குறியீடு எண்,

வடிவமைப்பு எண், வரைபட எண், சின்னம், மோனோகிராம், லேபிள்,] கையொப்பம் அல்லது கண்டுபிடிக்கப்பட்ட சொற்கள் அல்லது வேறு ஏதேனும் எழுத்துரு எழுத்துரு போன்ற ஒரு பெயர் அல்லது ஒரு குறியீடானது, அந்தக் குறிப்பிட்ட பொருள் தொடர்பாகப் பயன்படுத்தப்பட்டு, அந்தக் குறிப்பிட்ட பொருளுக்கும் அத்தகைய பெயர் அல்லது குறியீட்டைப் பயன்படுத்தும் நபருக்கும் இடையே வணிகத்தின் போக்கில் உள்ள ஒரு தொடர்பைக் குறிக்கும் நோக்கத்திற்காகவோ அல்லது அவ்வாறு குறிக்கவோ பயன்படுவது ஆகும், இது அத்தகைய நபரின் அடையாளத்தைக் குறிப்பிட்டோ அல்லது குறிப்பிடாமலோ இருக்கலாம்."

(பக்கம் 530)

21. இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பு, வேறொரு நபரின் வணிகப் பெயரைக் கொண்டிருக்கும் குறிப்பிட்ட பொருட்களுக்கு அந்த அறிவிக்கையில் உள்ள விலக்கு பொருந்தாது என்ற பொருண்மையை அடிப்படையாக கொண்டது. அந்த வழக்கின் பொருண்மைகளின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட குறிப்பிட்ட வணிகப் பெயர் ஒரு "வணிகப் பெயர்" என்று கூற முடியாது என்பதில் எந்த வாதமும் இல்லை என்பதை முதலில் கவனிக்க வேண்டும், ஆனால் இதுதான்

இப்போது எங்கள் முன் வாதிடப்பட்டுள்ளது. மேலும், அந்த வழக்கின் பொருண்மைகளின் அடிப்படையில், பின்வருமாறு கூறப்பட்டது:

> "மேல்முறையீட்டாளர்கள் தங்கள் வாடிக்கையாளர்களின் வணிகப் / வர்த்தக பெயரை நெகிழிக்களின் மீது ஒட்டுகிறார்கள் என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட நிலைப்பாடாகும். மேல்முறையீட்டாளர்களும் மற்றும் / அல்லது வாடிக்கையாளரும், அந்த "பொருட்கள் (நெகிழி)" அந்த வாடிக்கையாளருடன் ஒரு தொடர்பைக் கொண்டுள்ளன என்பதைக் குறிக்க விரும்புவதால், அவை அவ்வாறு ஒட்டப்படுகின்றன. 'A'-யின் வணிகப் / வர்த்தக பெயர் ஒட்டப்பட்ட நெகிழிக்களை அந்த வணிகப் / வர்த்தக பெயரைப் பயன்படுத்தும் நபரைத் தவிர வேறு எந்த நபரும் பயன்படுத்தப்பட மாட்டாது மற்றும் பயன்படுத்த முடியாது என்பதிலிருந்து இது தெளிவாகிறது. மேலே குறிப்பிடப்பட்டுள்ளபடி, தன்னால் உற்பத்தி செய்யப்பட்ட "பொருட்களுக்கும்" வணிகப் / வர்த்தக பெயரைப் பயன்படுத்தும் நபருக்கும் இடையிலான தொடர்பைக் குறிக்கும் உற்பத்தியாளரின் வர்த்தகத்தின் போது, ஒரு வணிகப் / வர்த்தக பெயர் பயன்படுத்தப்பட்டவுடன், விலக்கு இழக்கப்படுகிறது. எந்தவொரு

சந்தர்ப்பத்திலும், வாடிக்கையாளர் தனது வணிகப் / வர்த்தக பெயரை தயாரிப்பில் ஒட்ட விரும்புவது, தனது சொந்த அறிவுக்காகவோ அல்லது நலனுக்காகவோ அல்ல என்பதை மறந்துவிட முடியாது. மேல்முறையீட்டாளர்களால் வழங்கப்பட்ட நெகிழிக்கள், உள்ளாடையுடன் இணைந்த ஒரு பகுதியாக மாறி வருகிறது. வாடிக்கையாளர் வணிகப் / வர்த்தக பெயரை ஒட்டுவதற்கு காரணம், அந்தப் பொருளுக்கும் அவருக்கும் இடையே ஒரு தொடர்பு உள்ளது என்பதை இறுதி வாடிக்கையாளர் தெரிந்து கொள்ள வேண்டும் என்று அவர் விரும்புவதே ஆகும்..

(பக்கம் 532-533)

22. இந்த வழக்குகளின் பொருண்மைகள், மேற்சொன்ன கோஹினூர் எலாஸ்டிக்ஸ் வழக்கில் உள்ள பொருண்மைகளிலிருந்து மிகவும் வேறுபட்டவை ஆகும். மேற்சொன்ன கோஹினூர் எலாஸ்டிக்ஸ் வழக்கில், உண்மையில், வாடிக்கையாளர் தனது வணிகப் பெயரை பொருளில் ஒட்ட விரும்பினார், ஏனென்றால் அந்தப் பொருளுக்கும் அவருக்கும் இடையே ஒரு தொடர்பு உள்ளது என்பதை நுகர்வோர் தெரிந்து கொள்ள வேண்டும் என்று அவர் விரும்பினார் என்று கண்டறியப்பட்டது. இந்த வழக்கின்

பொருண்மைகளிலிருந்து இது மிகவும் வேறுபட்டது, ஏனெனில், மேலே நாம் கருதியுள்ளபடி, சணல் பைகளில் தேவைப்படும் குறியீடுகள் சணல் துறை ஆணையரால் கோரப்படும் படி கட்டாயமானவை மற்றும் மேற்கூறிய உற்பத்திப் பொருட்களுக்கும் அந்தப் பொருள்களின் உற்பத்தியாளருக்கும் இடையே வர்த்தகத்தின் போக்கில் உள்ள தொடர்பைச் சுட்டிக் காட்டுவதன் மூலம் சணல் பைகளின் மதிப்பை உயர்த்தும் நோக்கத்திற்காக அவை பயன்படுத்தப்படவில்லை என்பது தெளிவாகிறது.

23. இதுபோன்ற நிலையில், மேல்முறையீடுகள் அனுமதிக்கப்பட்டு, சுங்கம், கலால் மற்றும் சேவை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் தீர்ப்பு ரத்து செய்யப்படுகிறது.

மேல்முறையீடுகள் அனுமதிக்கப்பட்டது.

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்து கொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும்

பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."